THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

January, 1955

CONNEMARA PUBLIC LIBRARY
16 SEP 1956
MADRAS

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

ஜனுவரி, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்;— C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர் :— கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :— சங்கை C. P. ஹைனமென், விளுக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்.
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. பிரசங்கக் குறிப்புகள்.
5. இயேசுவின் ஜெபப்பள்ளி.
6. இரக்ஷணிய மனோகரம.
7. வேத வினாக்களும, விடைகளும.
8. பந்தயக் கதைப்போட்டி.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI   பசுமலை, ஜனுவரி 1955   இலக்கம் 3

வருடசந்தா: 1 ரு. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை,
டிசம்பர் 20, 1954.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

கிருஷ்ணா-கோதாவரி ஆதீனத்தில் வெகுகாலம் உண்மையாய்க் கடவுளின் திருப்பணியைச் செய்துவந்த கனம் முத்யாலு அத்தியட்சரவர்கள் இந்தமாதம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் என்ற செய்தியைத் துக்கத்துடன் அறிவிக்கிறேன். கனம் முத்யாலு அம்மாளவர்களுக்காகவும் அந்த அத்தியட்சாதீனத்தின்மேல் கடவுளின் ஆசீர் பெருகவும் புதிய அத்தியட்சரைத் தேர்ந்தெடுப்பதில் அவருடைய வழிநடத்துதல் இருக்கவும் நீங்கள் உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்வீர்களென நம்புகிறேன்.

கனம் டேவிட் செல்லப்பா ஐயரவர்கள் சென்னை அத்தியட்சராக ஜனுவரிமீ 25உ அபிஷேகம் செய்யப்படுவார்களென எதிர்பார்க்கிறோம். அந்த நாளில் அவருக்காக தயவுசெய்து ஜெபியுங்கள்.

இதை வாசிக்கும் தருணம் 1955-ம் ஐக்கிய கிராம ஊழியர் பஞ்சாங்கம் தயாராக இருக்கும். ஆண்டுதோறும் மிகுந்த பிரயாசத்தால் இது வெளியாகிறது. ஒவ்வொரு சபை ஊழியனும், சபைப் பொறுப்பையுடைய தனி நபர்களும் இதை வாங்கி உபயோகிப்பார்களென நம்புகிறேன். உங்களுக்காகக் கரிசனையுடன் தயாரிக்கப்பட்ட இந்த ஆயுதத்தை உபயோகிக்கத்தவறுதீர்கள்.

அன்றாடக வேதவாசிப்புக் கார்டு கொஞ்சக்காலமாக அச்சிடப்படவில்லை. தற்போது அது அச்சிடப்பட்டு வருகிறது. அதன் விலை காலணா. அன்றாடகம் ஒழுங்காய் வேதத்தை வாசித்து வருவதே கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அஸ்திபாரம். இந்த நோக்கத்தை நிறைவேற்ற இக்கார்டு உதவுமாகையால் சபை அங்கத்தினர் யாவரும் வாங்கி வாசிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தியட்சாதீன சங்கம் ஜனுவரி மத்தியில் மூன்று நாட்கள் கூடும். திருச்சபையில் நடைபெறும் எல்லா ஊழியங்களையும், முக்கியமாய் இளைஞர் ஊழியம், கிறிஸ்தவ இல்லம் ஆகியவற்றைப்பற்றி ஆலோசிக்கும் இக்கூட்டங்களில் கடவுள் பிரசன்னமாயிருக்கவும் ஆலோசிக்கும் எல்லா விஷயங்களிலும் அவருடைய வழிநடத்துதலுக்காகவும் நீங்கள் யாவரும் ஜெபிக்கக் கேட்கிறேன்.

புதுவருடத்தில் பிரவேசிக்கிற நமக்கு "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைவார்கள்" என்ற வேதவாக்கியத்தைக் கூற விரும்புகிறேன் (ஏசாயா 40 : 30) நாம நிச்சயமாய் நமபவேண்டிய வாக்குத்தத்தம் அது. நாம் யாவரும் முதிர் வயதாகி வருகிறோம். கடவுளோ அப்படியல்ல. அவர் பெலன் எப்போதும் புதிது. திருச்சபை உயிர்மீட்சியடைய நாம் கர்த்தருக்குக் காததிருந்தோம். அவர் வாக்குப்படி செய்வார் என்ற உறுதியான விசுவாசத்தோடு தொடர்ச்சியாய் நாம் அவருக்காகக் காத்திருப்போம.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

ஜனுவரி	2	தனுஷ்கோடி, பாம்பன் ஆராதனைகள்.
	5 - 7	பெங்களூர் — அத்தியட்சர்களின் ஒடுக்கக் கூட்டம்.
	9 – 10	கொடைக்கானல் — ஹைஸ்கூல் பள்ளி ஆசிரியர் ஒடுக்கக்கூட்டம்.
	12	திருமங்கலம் — குருமார் கூட்டம்.
	13 – 15	,, — அத்தியட்சாதீன சங்கம்.
	16 - 17	மடத்தாகுளம பாஸ்டரேட் — திடப்படுத்தல்.
	22—24	பரமகுடி ,, — ,,
	25	சென்னை — அத்தியட்சர் அபிஷேகம்.
	26—31	ராயலசீமா அத்தியட்சாதீனக் குருமார் ஒடுக்கக் கூட்டம்.

திருச்சபைச் செய்திகள்.

1. சபையின் திருநாட்கள்.

பெப்ரவரி 2 சுத்திகரிப்புத் திருநாள்
6 செப்துவ கெசிமா ஞாயிறு
கி.மு. சங்க ஞாயிறு.
13 செக்ச கெசிமா ஞாயிறு.
ஆஸ்பத்திரி ஞாயிறு.
20 கின்குவ கெசிமா ஞாயிறு
23 சாம்பற் புதன்கிழமை
24 பரி. மத்தியாவின் திருநாள்.
25 சர்வலோக ஸ்திரீகள் ஜெபநாள்.
27 லெந்து ஞாயிறு 1.

2. அகிலலோக ஓய்வுநாள் பள்ளிவிழா.

மதுரை பசுமலை நகர்களிலுள்ள எல்லா ஓய்வுநாட் பள்ளிகளும். 7—11—54 அன்று, மாலை மூன்று மணிக்கு, மதுரை அமெரிக்கன் கல்லூரி மாடிப் பேரறையில் அகிலலோக ஓய்வுநாட் பள்ளி தின விழாவினைச் சிறப்புற கொண்டாடுவான் வேண்டிக் கூடின. ஓராயிரம் சிறுவர் மலர்ந்த முகங்களுடனும், கொடிகளுடனும் சின்னங்களுடனும் கட்டடத்தைச்சுற்றி பவனிவர விழா வாரம்பிக்கலாயிற்று உன்னதத்தில் வீற்றுள்ள தங்கள் பிதாவினை பாடல்களால்உரத்த சப்தமாய் துதித்துக்கொண்டே சிறுவர்கள் பேரறைக்குள் அணி அணியாகப் பிரவேசித்தனர்.

டெபுடி கலெக்டர் திரு லூக்கா தேவபிரியம் அவர்கள் தலைமையின் கீழ் நகரிலுள்ள ஓய்வுநாட் பாடசாலைகளின் நிகழ்ச்சிகள் பலநிறைவேறின மாபெருங் கூட்டமாக கூடியிருந்த சிறுவர்கள் தமிழில் "சிறுவரின் விசுவாசப்பிரமாணத்தை" ஏகோபித்து அறிக்கையிட்டபோது எல்லோருடைய உள்ளங்களும் உணர்ச்சியால் நிறைந்தன.

தலைவர் விடுத்த செய்தியானது ஏற்றதாயும், பொருத்தமாயும் இருந்தது பரி. லூக்கா 2 : 51, 52ம் வசனங்களை அடிப்படையாகக் கொண்டு சிறுவர்கள் இயேசுவைப்போல் ஜீவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார் "இன்றைய தினத்தில் உங்கள் மகிழ்ச்சியைக் கண்டு உங்கள் பெற்றோரும், ஆசிரியர்களும் குருக்களும் களித்திருக்கின்றனர். ஆனால் இவர்கள் எல்லோரையும்விட இயேசு

அதிக களிப்படைந்திருக்கிறார். நீங்களும் அவரைப்போல் இருங்கள். தன்பெற்றோருக்கு அவர் அடங்கி இருந்தார். நீங்களும் அவ்வாறே கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளுங்கள்." "காஸபியான்கா" என்ற சிறுவன் தான் மரிக்கவேண்டியிருந்த தருணத்திலும் கூட தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்தான். பலர் அவனை அறிவற்றவன் என்று கருதினாலும்கூட, அவன் அதிக கீழ்படிதலுள்ள ஓர் பையன்."

"இயேசு தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிசமதிக மாய் விருத்தியடைந்தார். உங்கள் அயலாரிடத்தும், பள்ளி நண்பரிடத்தும விளையாட்டுத் தோழரிடத்தும் சமாதானமாக வாழக் கற்றுக்கொள்ளுங்கள். அப்போது உங்கள்மேல் தேவகிருபை தங்கும்" எனவும் கூறினார்.

பின் கிழக்குவாசல் ஓய்வுநாட் பாடசாலை மாணவர் காளி சாரன் பானர்ஜீயின் சிறுபிராயம், குணப்படுதல், சேவை ஆகியவற்றை நடித்துக்காட்டினர். நடிகத்திறமையோடும் நன்முறையிலும அந்நாடகம் நடித்துக்காட்டப்பட்டது. துக்ககரமான சம்பவத்தோடு காட்சிகள் முடியும் போதெல்லாம் அவ்வப்போது வழங்கப்பட்ட இன்னிசை மனத்துக்கு இதம் அளித்தது.

சிறுவர்கள் விழாவினை நன்கு அனுபவித்தனர். அவர்களில் அநேகர் தாங்கள் இத்தகைய பெரியதோர் குடும்பத்தின் அங்கத்தினர் என்பதை முதன் முறையாக உணர்ந்து மகிழ்ந்தனர். பெரியோருக்கும் சிறியோருக்கும் விழா வான்து இறைவனைப் பற்றும் உணர்ச்சி தரும்பும் ஓர் நிகழ்ச்சியாகவிருந்தது என ஸ்ரீமதி என் தானியேல் அம்மையார் எழுதுகிறார்கள்.

3. திருமணம்.

அமெரிக்க ஐக்கிய மாகாணம் பென்சில்வேனியா மாநிலம் ரிட்ச்வே நகர் உயர்திரு காலப் அவர்களின் திருமகனார் டேவிட் அவர்கட்கும தமிழ்நாடு மதுரை அமெரிக்கன் கல்லூரி தமிழ்ப் பெரியார் ப. சோதிமுத்து அவர்களின் திருமகளார் பத்மாசனி அவர்கட்கும் மதுரை மாநகரில், 1954-12-22 புதனன்று கல்லூரி ஆலயத்தில் நடைபெற்றது.

> யூதனென்றும் க்ரேக்கனென்றும் எம்மனிதனென்றும்
> வேறுபாடு வன்னில் என்றுமேயில்லை — ஒருவன்
> நீதியோடு வாழ்ந்தால் அது ஒன்றே போதும் என் முன்
> நிற்பதற்குரியோன் என்றுரைத்த எம் ஏசுவின்

அருள் மொழியைத் தழுவியே இத்திருமணம் நடைபெற்றது எனக் கூறுதல் மிகையாகாது. மகா கனம் அத்தியட்சர் திருமண ஆராதனையை நடத்திவைத்தார். மதுரை நகரப் பிரமுகர்களும் இத்

நண்பர்களும் ஏராளமாய்க்கூடி இவ்வைபவத்தைச் சிறப்பித்தனர். எல்லாம் வல்ல இறைவன்தாமே தம்பதிகளை ஆசீர்வதித்து வழி நடத்த நாம் ஜெபிப்பது ஓர் சிலாக்கியமாகும்.

4. தென்னிந்திய திருச்சபை.

ஜெபபுஸ்தகங்கள். கீழ்கண்ட தமிழ் புஸ்தகங்களை சென்னை C.L.S. சங்கத்தாரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் :—

1. சபையார் உபயோகத்திற்காக தயாரித்த ஜெபபுஸ்தகம் (முகவுரையில்லாதது) ஒரு புஸ்தகம் விலை 4 அணா.

2. முகவுரையுள்ள ஜெபபுஸ்தகம் (குருமார் உபயோகத்திற்காக) ஒரு புஸ்தகம் விலை 6 அணா.

3. ஞானகீதம், கீர்த்தனைகளில் சேர்க்கவேண்டிய முகவுரை.

4. தெ. இ. சபை அன்றுடக வேதவாசிப்புகள் (ஆங்கிலம்) 2 அணா.

5. வேதாகம சங்க ஆண்டுவிழா சம்பந்தமான வேதபாடப் பரீட்சை

மதுரை-பசுமலையிலுள்ள 9 சபைகளும், 14 ஸ்தாபனங்களும் சுமார் 1121 மாணவர்களை பரீட்சைக்கு 1954ம் வருஷ அனுப்பிவைத்தனர். இறுதியில் வெகுமதிப் பரீட்சையில் 105 பேர் பங்கெடுத்தனர். 7 பேருக்கு முதல் பரிசு, 11 பேருக்கு இரண்டாம் பரிசும், 39 பேருக்கு தேர்ச்சிபத்திரங்களும் வழங்கப்பட்டன.

1955-ம் வருஷத்திலும் இப்பரீட்சைகள் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. விவரங்கள் வேண்டியவர்கள் மதுரை Y.M.C.A. காரியதரிசி ஸ்ரீ ரத்னசாமி யவர்கட்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

6. தபால் மூலம் வேதம் கற்றுக்கோள்ளல்.

வெகு பிரயாசத்தின் மேல் வேலூரைச் சேர்ந்த கனம் பீட் ஐயரவர்கள் கீழ்கண்ட வேதபாடங்களை ஆயத்தம் செய்திருக்கிறார்கள். அவையாவன:—

1. ஜீவ ஒளி—பரி. யோவான் சுவிசேஷத்தைத் தழுவியது
2. கடவுள் ராஜ்யம்—பரி மாற்கு „ „
3. நற்செய்தி— பரி. லூக்கா „ „ (ஆங்கிலத்திலும் உண்டு.)
4. அப்போஸ்தலர் நடபடிகள்—அப்போஸ்தலர் நடபடிகளைத் தழுவியது.

தனிப்பாடத்தின் ஒருதாள் விலை 1 அணா அந்தந்தப் பாடத்திற்கேற்ற வேதப்பகுதியையும் அதற்கதற்குரிய விலை கொடுத்து வாங்கலாம முதல்பாடத்திற்குரிய விலை அணா ஒன்று கொடுத்து வாங்கி கேள்விகளைப் பூர்த்திசெய்து வேலூருக்கு அனுப்பினால் இலவசமாக அடுத்தபாடம அனுப்பப்படும இவ்விதமாய் ஒவ்வொரு புஸ்தகத்திற்கும பல பாடங்கள் உண்டு, எல்லாவற்றிற்கும் திருப்தியாய் விடைகள் எழுதியனுப்புகிறவர்களுக்கு தேர்ச்சிப்பத்திரம் ஒன்று அனுப்பப்படும், விவரம் வேண்டியவாகள் பசுமலை ஏ. சாமுவேல் ஐயர் என்ற விலாசத்திற் கெழுதவும்

7. கிறிஸ்தவ வாலிப சங்க அனாதை விடுதி (Y.M C.A. Boys' Home) மதுரை.

7 முதல் 10 வயதிற்குட்பட்ட அனாதைப் பையன்களுக்கென்று இவ்விடுதி டிசம்பர் 20-ம் உ மதுரைக் கலக்டர் அவர்களால் திறக்கப்பட்டது குருமாரும இதர நண்பர்களும் அனாதைப் பையன்களை இவ்விடுதிக்கு வக்கலாத்துச் செய்யலாம். விவரங்களுக்கு :—

கனம் ஜியார்ஜ் ஊமன், அனாதை விடுதிக் காரியதரிசி, பீபிகுளம், நரிமேடு, தல்லாகுளம், மதுரை.

என்ற விலாசத்திற் கெழுதித் தெரிந்து கொள்ளலாம், என ஓய்.எம்.சி.ஏ. காரியதரிசி கனம் ரத்னசாமி எழுதுகிறார்கள்.

சிறுவர் பாகம்

கிறிஸ்தவ வீட்டைக் கட்டுதல்

(குறிப்பு :—கிறிஸ்தவக் குடும்பப் பண்டிகையை ஆசரிப்பவர்களுக்குதவியாக இதை பிரசுரிக்கிறோம் ப... ர்).

தலைவர் :—உறுதியும் அழகும் வாய்ந்த நான்கு சுவர்கள் வீட்டைத் தாங்கி நிற்கின்றன அதே மாதிரி நாமும் இங்கே ஒரு வீட்டைக்கட்டுவோம்.

முதல் பிள்ளை :—வீட்டுக்கு முன் முதலாக தகப்பன் நிற்கிறார் அவர் அறிவும் அன்பும் பொருந்தியவர். அவரே வீட்டின் தலைவர் ; நமது கண்களின் ஒளி.

2வது பிள்ளை :—வீட்டின் பின்பக்கத்தில் தாயார் நிற்கிறார். அவர் அன்பும் அருளும் நிறைந்தவர்.

இல்லத்தின் உயிரும் ஒளியுமாய் இலங்குகிறார்.

3வது பிள்ளை :—கிழக்குச் சுவர் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைக் குறிக்கிறது அவர்களின் முகங்களில் வாழ்க்கையின் உதய சந்தோஷம் பிரகாசிக்கிறது.

4வது பிள்ளை : —ஆனால் மேற்குச் சுவர் இல்லாவிட்டால், வீடு கீழே விழுந்து விடும். பாட்டன், பாட்டி, மாமன், மாமி, சின்னையா, சின்னம்மா, அவர்கள் பிள்ளைகள்—இவர்களே அந்தச்சுவர்.

5வது பிள்ளை :—நமது வீட்டின் கூரை பரஸ்பர அன்பே. அது எந்தக் கட்டிடத்திற்கும பொருந்தும், எந்தக் குற்றத்தையும் மூடும். மழையையும், புயலையும் தடுக்கும் இந்த வீட்டில் அன்பு நிலைத்திருக்கும வரையில் இதற்கு யாதொரு தீங்கும் நேரிடாது.

6வது பிள்ளை :—இதுவே கதவு. தீமைக்கு அடைக்கும். நன்மைக்குத் திறக்கும். பக்கத்தில் மனச்சாட்சியாகிய வாயில் காப்போன் நின்று கொண்டிருக்கிறான் நாம என்ன செய்யவேண்டுமென்று உணர்த்திக் காட்டுவான்.

தலைவர் :—பாருங்கள் ; நாம் இங்கே ஒரு நேர்த்தியான வீடு அமைத்திருக்கிறோம் நாம் எங்கு சென்றாலும், நமது உள்ளம் இங்கேயே இருக்கும் மழை பெய்தாலும் காற்று அடித்தாலும் அன்பு, அறம், நட்பு ஆகிய இவைகள் வீட்டை விழாதபடி தாங்கும். இதோ ! ஒரு கொத்தன் வருகிறான் எங்கள் நண்பா, இங்கேவா. உன்னிடம் என்ன இருக்கிறது ?

7வது பிள்ளை :—நான் குடும்ப ஜெபபீடத்தை அமைக்கிறேன். இந்த இடத்தில் தினந்தோறும் பிரார்த்தனை ஏறெடுக்கப் படும் இந்த இடத்தில் கடவுள் விருந்தளிக்கிறவராயும், விருந்தாளியாகவும் இருந்து ஆசீர்வதிப்பார்.

தலைவர் : —ஆ ! இப்பொழுது வீடு பூர்த்தியாகி விட்டது. தெய்வீக ஒளியோடு ஜொலிக்கிறது

பிரார்த்தனை செய்வோம்.

ஜெபம்

ஆண்டவரே, ! எங்கள் குடும்பங்களையும், உணவையும், உறைவிடத்தையும் கிருபையாய் ஆசீர்வதியும். நாங்கள் சமாதானத்தோடும், சுயாதீனத்தோடும் இங்கே வாழ்வோமாக நாங்கள் ஒருவரை

யொருவர் அதிகமாய் நேசிக்க அருள் புரியும். எங்கள் தெய்வமாகிய உம்மில் அஸ்திவாரம் போடப்பட்டு எங்கள் வீடுகள் நிலைத்திருக்கும்படியாக கிருபை செய்யும். ஆமென்.

தலைவர் :—வீட்டின் கூரை அன்பு என்பதை மறக்கக்கூடாது. நம்மைக் கவிந்திருப்பது அன்பே. வீட்டின் ஒரு சுவர் இடிந்து விழுந்தாலும் அதில் குடியிருக்கலாம். ஆனால் கூரை இடிந்து விழுந்தால் வீடு முழுவதும் அழிந்து போகும் இப்பொழுது வேதபுத்தகத்தில் அன்பைப் பற்றி கூறியிருக்கிற சில வசனங்களைக் கேட்போம்.

முதல் பிள்ளை :—அநேக தண்ணீர்கள் அன்பை அவிக்கமுடியாது வெள்ளங்கள் அதை அழிக்க முடியாது

2வது பிள்ளை :—ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளை எல்லாம் அன்புக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்.

3வது பிள்ளை :—மரணத்தைப் போல் அனாதி சிநேகத்தால் நான் உன்னை சிநேகிப்பேன்.

4வது பிள்ளை :—அன்பு பிறனுக்குத் தீங்கு செய்யாது. பிரியமானவர்களே,! ஒருவரிலொருவர் அன்பு கூறுவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது.

5வது பிள்ளை :—நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல் நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது.

தலைவர் :—நாமெல்லாரும் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணுவோம.

ஜெபம்.

எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவே, நாங்கள் உம்மை அதிகமாய் நேசிக்கக் கிருபை செய்யும் அன்பு, எங்கள் உள்ளங்களில் சுரந்து வெள்ளம் போல் கரை புரண்டு ஓடும்படியாகக் கிருபை செய்யும். அளவில்லா அன்பு உம்மேல், மேலும் மேலும் உண்டாகும்படி கிருபை செய்தருளும்.

ஆசீர்வாதம் கூறவேண்டும்.

---

16 SEP 1956
MADRAS

கிறிஸ்தவ இல்லம்

(ஸ்ரீ வீ. ஜெயராஜ் ஆசிரியர் இயற்றியது)

பஞ்ச இராக மாலிகை

செஞ்சுருட்டி

(காந்தியைப் போலொரு சாந்த என்ற பல்லவியில் எடுப்பு)

பல்லவி

*உலகினில் கிறிஸ்துவை உடைய நற்குடும்பங்கள்
ஓங்கிட அருள் வீரே—தயாபரா—* (உ)

அனுபல்லவி

*மலைமிசை விளக்கென மனையறம் இலங்கவும்
நிலமிசை சொர்க்கமாய் நித்தம் துலங்கவும்* (உ)

1. சரணங்கள்

*உலகும் அதன் நிறைவும் உமக்கே சொந்தம்
உரிமை கொள்ள எமக்கு உண்டோ தொந்தம்?
இலகும் இச்சத்தியத்தை ஏற்காதனந்தம்
ஏற்றத் தாழ்வைப் பெருக்கும் எல்லைக்கேதந்தம்?* (உ)

2 சிந்துபைரவி

*இந்துக்களும் வெறுக்கும் ஜாதித் தொல்லை
எம்மைவிட்டின்னமே போக வில்லை
சிந்தனைச் சிறையின்னும் தீர வில்லை
சிறுமதி கொண்டபோக்கும் சிதைய வில்லை.* (உ)

3 புன்னாக வராளி

*மலைப் பிரசங்கத்தை வாயாரப்படித்தோம்
மனக்காணிக் கிரியையின்றி வாழ்வில் நடித்தோம்
மலரும் மாதரை இழி வாகமதித்தோம்
மாப்பிள்ளையை விலைக்கு வாங்கும் வழக்கம்வைத்தோம்* (உ)

4 மோகனம்

*மக்களைப் பக்தியில் வளர்க்காதிருந்தோம்
மற்றவர் நலம்பேணும் மாண்பும் மறந்தோம்
பக்தர்சகவாசமின்றிப் பாழே அடைந்தோம்
பற்றும் விசுவாசம் குன்றிப் பாவமே புரிந்தோம்* (உ)

5 நாத நாமக்ரியை

எப்படியும் பொருளீட்ட என்றும் முயன்ரும்
இதனுல் சகோதரத்வம் என்பதையே கொன்ரும்
இப்பிழைகட்காய் நொந்து இவற்றைப் புகன்ரும்
எம்மை மன்னிக்குமாறு இரந்து நின்ரும். (உ)

பிரசங்கம்

(கனம் ஸ்டீபன்சன் ஐயர், சிவகங்கை)

"நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" எபி **12 : 1.**

எபிரேய நிருப ஆக்கியோன் கிருஸ்தவ ஜீவியத்தை ஒரு ஓட்டத்திற்கு ஒப்பிடுகிருர். பவுலும் கூட இவ்விதமாகவே ஒப்பிட்டிருக்கிருர் "நன்ருக ஓடக்கூடாதபடி உங்களை தடை செய்தவன் யார் ?, 'நான் ஓட்டத்தை முடித்தேன் !....... நமக்கு முன்னோடினவராகிய இயேசு'........ என வாசிக்கிரேம். கிருஸதவ ஜீவியமும் பந்தய ஓட்டமும் சில அம்சங்களில் ஒன்ருக இருக்கிறதாகக் கருதுகிருர்கள். அத்தேனே, கொரிந்து, பிலிப்பி முதலிய இடங்களில் அக்காலத்து பந்தய சாலைகளைப்பற்றிய அறிவு பொதுவாக அனைவருக்கும் இருந்தது. ஆகையால் எபிரேய நிருப ஆக்கியோன் ஓட்டத்தைப்பற்றி சொன்னுல் அந்த உவமையின் மூலமாக ஜனங்கள் கருத்தை உணரக்கூடும்.

பந்தய ஓட்டததில் ஓடக்கூடியவன் அனுசரிக்கும் சில விதிகள் உண்டு :—

1. நல்ல ஆரம்பம் வேண்டும்.

ஓட்டத்தை ஓட ஆரம்பிக்கிறவர்கள் பிழையில்லாத ஒரு ஆரம்பத்தைக் கொண்டு ஓட ஆரம்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் ஜெயமடையமுடியாது. கிருஸ்தவ ஜீவியததின் ஆரம்பம கிருஸ்துவைககொண்டு ஆரம்பிக்கவேண்டும் ஒவ்வொரு நாளாக இருந்தாலும் புதுவருஷ ஆரம்பமாயிருந்தாலும் தேவனை நினைத்து அவருக்கென்று தன்னைப் பிரதிஷ்டை செய்து அவரைக்கொண்டு ஆரம்பிக்கும்போது அவ்வருஷம் அல்லது நாள் நம் ஜீவிய ஓட்டத்தில் அதிக உதவியாக இருக்கும். அதுவே வெற்றிசிறக்கும் ஜீவிய ஓட்டத்திற்கு ஆரம்பம்.

2. சரிவர ஓடவேண்டும்.

நல்ல ஆரம்பம் அத்யாவசியமானது, நல்ல ஆரம்பம் மாத்திரம் இருந்தால்போதாது சரிவர ஓடவேண்டும். ஓட்டத்தில் போக போக பெலனோடு, முயற்சியோடு, வேகமாக ஓட வேண்டும். அப்படியே கிருஸ்தவ ஜீவியத்தில் புதுவருட ஆரம்பத்தில் நல்ல தீர்மானம் சொல்கிறார்கள் சிலநாட்கள் மாததிரம் கொண்டு செலுத்துகிறார்கள் பிறகு தவறி விடுகிறார்கள். கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களாக அவருடைய பலத்திலும் சத்துவத்திலும் ஒவ்வொரு நிமிஷமும் வளரும்போது, தெய்வீக கிருபையை உணர்ந்து ஜீவிக்கும்போது சாத்தியமாகும்.

3 இலக்கை நோக்கி ஓடு.

ஓட்டத்திற்கு ஒரு காரணம் உண்டு. ஒரு வெகுமதி கிடைக்கும். ஒலிவ இலையாகிய கிரீட வெகுமதியோ அல்லது மதிப்பைக் கொடுக்கக்கூடிய வேறு வெகுமதியோ இருக்கலாம் ஆனால் கிருஸ்தவ ஜீவியத்தின் இலக்கு மேன்மையானது, "இயேசுவை நோக்கி" "வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற ஜீவ கிரீடத்தை நோக்கி", "நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள" ஓடவேண்டும். அவ்வித நோக்கத்தை முன்வைத்து ஓடாவிட்டால் வெற்றி காண முடியாது. அநேகருடைய ஜீவியம் நோக்கமற்றதாகவே முடிகிறது. அது எவ்வளவு பெரிய நஷ்டம்.

நாம் கிருஸ்தவ ஜீவியத்தை நடத்திஆகவேண்டும். ஓட்டத்தை ஓடிஆகவேண்டும். முடியாது என்று சொல்வதற்கில்லை. நாம் கிருஸ்துவைக்கொண்டு, அவர் கிருபையால், அவரை நோக்கி ஓடுவோமாக.

வேதவினாக்களுக்குறிய விடைகள்

(1)	எசேக்கியா—யூதாவின் அரசன்	II ராஜா 20 : 1
(2)	லேவியர்	எண். 2 : 17
(3)	எபிரேயர் நிருபம்	
(4)	I தெசலோனிக்கேயர்	
(5)	நெகேமியா	நெ. 1 : 11
(6)	ரூத்	மத் 1 : 5
(7)	உசியா	II நாளா 26 : 16-21
(8)	ஆதியாகமம்	ஆதி 2 : 1-3
(9)	நாற்பது வருடங்கள்	உபா. 1 : 3
(10)	கொரிந்து சபையார்	I கொரி. 1 : 12
(11)	எரேமியா	எரே. 9 : 1
(12)	குணப்பட்ட உடனே	கலா. 1 : 15-18

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதினைந்தாம் பாடம்

' இருவர் ஒருமனப்பட்டால் '

அல்லது

ஐக்கிய ஜெபத்தின் வல்லமை.

" அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும், பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்." (மத். 18 : 19 : 20)

' மனுஷர் காணாதபடி, உன் அறை வீட்டிற்குள் பிரவேசித்து, உன் பரம பிதாவோடு தனித்திரு ' என்று இயேசுவின் ஜெபப் பள்ளியில் மூன்றாவது பாடத்தில் படித்தோம். அதில் இரண்டுவித ஜெபங்களில் ஒன்றான தனியாளின் ஜெபத்தைப்பற்றி ஆண்டவர் போதித்தார். இந்தப் பாடத்தில் அந்தரங்கமான தனியாள் ஜெப மட்டுமன்று; வெளியரங்கமான ஐக்கிய ஜெபமும் தேவை என்று போதிக்கிறார். இருவர் அல்லது மூவரின் ஐக்கிய ஜெபத்திற்கு மிகவும் சிறந்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். மரத்தின் வேர் மண்ணுக்குள் மறைவாயும, அடிமரமும் கிளைகளும் சூரிய ஒளிக்குள் ஓங்கியுமிருப்பதுபோலவே, ஜெபமும் முற்றும் விருத்தியடைய வேண்டுமானால், ஆத்துமா கடவுளைத் தனித்து அந்தரங்கத்தில் சந்திக்கவேண்டும் அத்துடன் இயேசுவின் நாமத்தில் எல்லோரும் ஒன்றுபடுகிற பகிரங்க ஐக்கியமும் அதற்கு வேண்டும்.

இது ஏன் என்பதற்குத் தெளிவான காரணம் உண்டு மனிதனை அவன் அயலானோடு ஐக்கியப்படுத்தும கட்டு அல்லது உடன்பாடு, கடவுளோடு மனிசனை ஐக்கியப்படுத்தும் கட்டு அல்லது உடன்பாட்டிற்குக் குறைந்தது அன்று. எனவே மனிதன் கடவுளோடும் அயலானோடும ஒருமைப் பாடு உடையவன். கிருபையானது கடவுளுக்கும் நமக்கும் இருக்கும் சம்பந்தத்தைப் புதுப்பிப்பது மட்டும அன்று. அது நமக்கும நமது அயலானுக்கும் உள்ள சமபந்தத்தையும் புதுப்பிக்கிறது, " எனது பரமபிதாவே " என்று மட்டுமல்ல, " எங்கள் பரமபிதாவே " என்று சொல்லவும் கற்றிருக்கிறோம். ஒரு குடுமபத்திலுள்ள பிள்ளைகள் தனித்தனியாகத் தங்கள் தகப்பனை ' என் தந்தையே ' என்று அழைத்துச் சந்தித்து, எல்

லோரும் ஒன்ருகக் கூடி 'எங்கள் தந்தையே' என்று அழைத்துத் தங்கள் விருப்பங்களை அல்லது அன்பினை ஐக்கியமாக வெளியிடாமல் போனால் அதைப்போல இயற்கைக்கு விரோதமானது வேறென்றும் இல்லை விசுவாசிகள் ஒரே குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் மட்டுமல்லர். அவர்கள் ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களும் ஆவார்கள். சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் மற்ற அவயவங்கள்மீது சார்ந்திருப்பதுபோலவும். சரீரத்தில் வாசம் செய்கிற ஆவியின் முழுக் கிரியையும எல்லா அவயவங்களின் ஐக்கியததிலும், கூட்டுழைப்பிலும் நிறைவேறுவது போலவும், கிறிஸ்தவர்களும் ஒருவரோடொருவர் கொண்டுள்ள ஐக்கியத்தில்தான், பரிசுத்தாவியின் மூலமாகக் கொடுக்க இருக்கிற கடவுளுடைய முழு ஆசீர்வாதத்தையும் தேடவும் அடையவும் முடியும். விசுவாசிகளின் ஐக்கியத்திலும் ஒருமைப்பாட்டிலுமே பரிசுத்தாவியானவர் தமது முழு வல்லமையையும் வெளிப்படுத்த முடியும். நூற்றிருபதுபேரும் ஓரிடத்தில் ஒருமிக்கக் கூடி, ஒருமனப்பட்டுத் தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருந்தபோதுதான் பரிசுத்தாவி அவர்கள்மீது இறங்கினது (அப். 2:1)

நமது ஆண்டவர் சொன்ன வார்த்தைகளில் ஒரு மெய்யான ஐக்கிய ஜெபத்தின் அறிகுறிகள் சில கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதலாவது அறிகுறி: கேட்பதில் ஒருமைப் பாடு, மற்றவன் ஒருவன் கேட்பதில் ஏதாவது ஒரு காரியத்தில் ஒருமைப் பாடு மட்டும் இருந்தால் போதாது, எல்லோரும் விரும்புகிறதாயிருக்கவேண்டும் எல்லோரும் ஒன்ருகக் கேட்பதாயிக்கவேண்டும். எல்லா ஜெபங்களிலும இருப்பது போலவே அது ஆவியிலும் உண்மையிலும ஒருமைப்பாடுடையதாயிருக்க வேண்டும். அப்படிப் பட்ட ஒருமைப்பாட்டில், நாம் கேட்பது என்ன என்பது தெளிவாய்ப் புலப்படும். கடவுள் சித்தத்திற்கு இசைய நாம் விசுவாசத்துடன் கேட்கிறேமா என்பதும், நாம் கேட்பதைப் பெற்றுக் கொண்டோம் என்று விசுவாசிக்க ஆயத்தமாயிருக்கிறேமா என்பதும் தெளிவாகும்.

'மெய்யான ஐக்கிய ஜெபத்தின் இரண்டாவது அறிகுறி அல்லது அடையாளம்: இயேசுவின் நாமத்தில் ஒன்ருகக் கூடிவருதல், ஜெபத்தில் இயேசுவின் நாமத்தின் வல்லமையையும், அதன் தேவையையும பற்றிப் பின்னல் அதிகமாகப் படிக்கலாம் விசுவாசிகள் ஒன்றுசேருகிற ஐக்கியத்தின் நடு அல்லது மையம், இயேசுவின் நாமமாயிருக்கவேண்டும். ஒரு குடும்பம் எல்லோரையும் இணைக்கிறதுபோல எல்லோரையும் ஒன்ருக இணைக்கிற கட்டு இயேசுவின் நாமமே, "கர்த்தருடைய நாமம் ஓர் பலத்த துருக்கம்; நீதிமான் அதற்குள் ஓடித்தப்புகிருன்." அதனை அறிந்து விசுவாசிக்கிறவர்களுக்கு அந்த நாமம் அவ்வளவு உண்மையானது. அதற்குள் சந்

திப்பது அவரே பிரசன்னமாயிருப்பதாம். அவருடைய அடியார்களுடைய அன்பும் ஐக்கியமும் அவருக்கு அளவற்ற கவர்ச்சியாகின்றன. "ஏனெனில், இரண்டு பேராவது, மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார் அல்லவா? அன்புடன் ஜெபிக்கிற அடியார்களின் ஐக்கியத்தில்தான் இயேசுவின் உயிருள்ள பிரசன்னம் ஐக்கிய ஜெபத்திற்கு அதன் வல்லமையை அளிக்கிறது.

ஐக்கிய ஜெபத்தின் மூன்றாவது அறிகுறி: நிச்சயமான பதில். "என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்" மத சம்பந்தமான ஐக்கியத்தை நிலை நிறுத்தலுக்கோ அல்லது நம்மை ஊன்றக் கட்டுதலுக்கோ ஒரு ஜெட க் கூட்டம் உதவியாயிருக்கக்கூடும் ஆனால் ஆண்டவரின் கருத்து இஃது அன்று ஜெபத்திற்கு ஒரு விசேஷித்த பதிலைப் பெறுவதற்கான கருவியாகவே ஐக்கிய ஜெபத்தைக் கருதினார் நமது ஆண்டவர். கேட்டதற்குப் பதில் பெறாத ஜெபக்கூட்டம் ஜெபக்கூட்டமாகாது. நம்மில் யாராவது ஒருவருக்குத் தாம் கேட்டதைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பலத்த விசுவாசமில்லாவிட்டால், பிறருடைய விசுவாச பலத்தைத் தேடவேண்டும் விசுவாசம், அன்பு, பரிசுத்தாவி, இயேசு நாமத்தின் வல்லமை, இயேசுவின் திருப்பிரசன்னம் ஆகியவை ஒன்று சேரும்போது, அவை அதிகமாகக் கிரியை செய்கின்றன. வேண்டிக் கொண்டதற்குப் பதிலும் நிச்சயமாய், விரைவாய்க் கிடைக்கிறது. கனி, பதில், கேட்டதைப் பெறுதல் ஆகியவைகளே உண்மையான ஐக்கிய ஜெபத்தின் அறிகுறிகள். 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'.

இந்த ஐக்கிய ஜெபத்தின் சொல்லி முடியாத சிலாக்கியமும் வல்லமையும் எவ்வளவு பெரிது! விசுவாசிகளான ஒரு கணவனும் ஒரு மனைவியும், ஐக்கிய ஜெபத்தின் மூலம் ஆண்டவர் பிரசன்னத்தையும், அவரது வல்லமையையும் அனுபவிக்கும்படியாகவே அவர்கள் இயேசுவின் நாமத்தில் இணைக்கப்பட்டார்கள் என்பதை அவர்கள் உணர்ந்தால் அது எத்தனை பாக்கியம்! (1 பேதுரு) சிநேகிதர்களும் இருவர் அல்லது மூவர் ஒன்றுகூடி ஜெபிப்பதால் ஒருவருக்கொருவர் எவ்வளவு உதவியாயிருக்கமுடியும்! இயேசுவின் நாமத்தில் ஒன்றாகக் கூடுவதும், அவருடைய பிரசன்னத்தில் விசுவாசமும் பதிலை எதிர்பார்ப்பதும், ஒவ்வொரு ஜெபக்கூட்டத்திலும் முன்னணியிலிருந்தால் எத்தனை இன்பம்! ஒவ்வொரு திருச்சபையிலும் ஐக்கிய ஜெபத்திற்காகவே அதின் அங்கத்தினர் ஐக்கியப்படுத்தப்பட்டனர் என்று உணர்வது எத்தனை நன்மை! கடவுள் இராஜிய வருகை, முதலாவது பரிசுத்தாவியை ஊற்றுவதிலும், பிறகு இராஜா

தாமே நேராக விஜயம் செய்தல் ஆகியவை சருவலோகத் திருச்சபையின் ஐக்கிய ஜெபமாயிருந்தால் அது எத்தனை மகத்துவம்!

பரி. பவுல் அப்போஸ்தலனின் வாழ்க்கையில் ஐக்கிய ஜெபத்தில் அவருக்கு எவ்வளவு விசுவாசம் இருந்தது என்பதைத்தெளிவாய்க்காண்கிறோம் உரோமாபுரியாருக்கு, "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும ஜெபங்களில், நான் போராடுவது போல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நமுடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பின் நிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்றெழுதுகிறார் (ரோமர் 15 : 32) இதன் மூலம் தமது எதிரிகளிலிருந்து அவர் காக்கப்படவும், அவரது திருப்பணி விருத்தி அடையவும், கடவுளிடம் பதிலை எதிர்பார்க்கிறார். அப்படியே கொரிந்தியருக்கு எழுதும் போது, "அநேகர்மூலமாய் எங்களுக்குண்டான தயவுக்காக, அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்". (2 கொரி. 1 : 11) என்று தங்கள் ஐக்கிய ஜெபத்தின் மூலமாக அவர் விடுதலையில் அவர்கள் பங்குபெற விரும்புகிறார். எபேசியருக்கு எழுதும்போது, எந்தச்சமயத்திலும சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும, ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மனவுறுதியோடும், சகலபரிசுத்தவான்களுக்காகவும், பண்ணும்வேண்டுதல்களோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசி. 6 : 18) என்கிறார். பிலிப்பியருக்கு எழுதும்போது, தமது துன்பதுக்கங்கள் தமது இரட்சிப்பாகவும், சுவிசேஷபிரபல்யத்திற்காகவும் பயன்படுமாறு அவர்கள் ஐக்கியமாய் ஜெபிக்கவேண்டும் என்று எழுதுகிறார். 'அது உங்கள் வேண்டுதலினாலும், இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியும்'. (பிலிப் 1 : 1.9.) என்கிறார் கொலோசெயருக்கு எழுதும் போது, 'திருவசனம் செல்லும்படியான வாசலைத்தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்.' (கொலோ. 4 : 4) என்கிறார். தெசலோனிக்கேயருக்கு எழுதும்போது, 'கடைசியாக,' சகோதரரே. உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும் படிக்கும், துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காகவேண்டிக்கொள்ளுங்கள்.' (2 தெச. 3 : 1, 2) என்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் தாம் ஒரு உறுப்பினரென்று உணர்ந்தார். ஆகவே அத்திருச்சபையின் அனுதாபத்திலும், ஒத்துழைப்பிலும் அவர் அதிசம சார்ந்திருந்தார். அவர்களின் ஜெபத்தின் மூலம் தமக்கு விசேஷித்த ஆசிகள் கிடைக்குமென்று விசுவாசித்தார். திருச்சபையின் ஜெபமே, கடவுள் இராஜ்ஜியத்திருப்பணியில் கடவுளுடைய வல்லமையாக இருக்கிறது என்று பவுல் கருதினார்.

கடவுளுடைய இராஜ்யம் வருவதற்காகவும், கடவுளுடைய ஊழியக்காரர் மீதும அவருடைய திருவசனத்தின் மீதும் கடவுளுடைய வல்லமை ஊற்றப்படுவதற்காகவும், ஆத்துமாக்களை இரட்சிப்பதில் கடவுளுடைய நாமம் மகிமைப்படுவதற்காகவும், இரவும் பகலும் ஜெபிப்பதற்குத்திருச்சபையானது, தன்னை முற்றும் ஒப்புக்கொடுக்குமானல் அது எப்படிப்பட்ட வல்லமையை விருத்தி செய்து, பிரயோஜனப்படுத்த முடியும் என்று யாரால் சொல்ல முடியும்? ஒருவரையொருவர் கவனித்துக்கொள்ளவும, ஒருவரை யொருவர் பலப்படுத்தவும் மட்டுமே திருச்சபையின் அங்கத்தினர் கள் ஒன்றுயிணைக்கப்பட்டிருப்பதாக அநேக திருச்சபைகள் நினைக் கின்றன. கடவுள் தமது பரிசுத்தவான்களின் ஜெபங்களால் உலகை ஆளுகிறர் என்பதை அப்படிப்பட்ட திருச்சபைகள் அறிவதில்லை; ஜெபமே சாத்தானை வெல்லும் வல்லமை என்றும் உணர்வதில்லை தெய்வீக வல்லமைகளை உலகில் பயன்படுத்தும் உரிமை திருச்சபைக்கு ஜெபத்தினலேயே கிடைக்கும் என்பதையும் தெரிவதில்லை. ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர்வதும், தமது விருப்பங்கள் அவருடைய வல்லமையால் பரமபிதாவில் நிறைவேறு வதை அனுபவிப்பதுமாகிய வானவாசலாக, ஒவ்வொரு திருச்சபை யும் இருக்கும்படியாக, இயேசுநாதர் தமது வாக்குத்தத்தத்தால் பிர திஷ்டை செய்திருக்கிறர் என்பதை அச்சபைகள் நினைவு கூருவது மில்லை.

கிறிஸ்தவ உலகில் ஆண்டுதோறும் ஐக்கிய ஜெப வாரத்தைத் தந்தருளிய கடவுளுக்கு நாம் அதிகமாக நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்கள். நமது ஐக்கியத்தின் ரூபகாரமாகவும், ஐக்கிய ஜெபத் தினல் வரும் வல்லமையில் வைக்கும் நமது விசுவாசத்தின் அறிகுறி யாகவும், சருவலோகத் திருச்சபையின் சகல தேவைகளையும்கொள் ளத்தக்க அகன்ற இருதயங்களை உருவாக்கும் பயிற்சிப் பள்ளியாக வும், விடாமுயற்சியான ஐக்கிய ஜெபத்திற்கு உதவியாகவும் ஐக்கிய ஜெபவாரம் இருக்கிறது. ஆகையால் அதின் பிரயோஜனம் அளவு கடந்தது ஆனல் விசேஷித்த விதமாக, சிறிய வட்டாரங்களில் அல்லது சிறிய சபைகளில் ஜெபத்தின் ஐக்கியம் தொடர்ச்சியாயிருக்க ஒரு தூண்டுகோலாக இருப்பதற்கு ஐக்கிய ஜெபவாரத்தால் வரும் ஆசீர் வாதம் அதிகம். கடவுளுடைய பிள்ளைகள் ஐக்கிய ஜெபம் வாரம் என்பது என்ன என்று அறியும்போது, அதன் ஆசீர்வாதம் இன்னும் அதிகமாகும். இயேசுவின் நாமததிலே எல்லாரும் ஒன்றுய்க் கூடு வதும், பரிசுத்தாவிக்குள் எல்லாரும் ஐக்கியப்படுத்தப்பட்ட ஓரே சரீரத்தின் மத்தியில் ஆண்டவருடைய பிரசன்னம் விளங்கச் செய் வதும், அவர்கள் ஒருமனப்பட்டுக் கேட்பவையாவும் பரமபிதாவால் அருளப்படும் என்ற வாக்குத்தத்தம் நிறைவேறுமாறு தைரியமாகக் கேட்பதுமே ஐக்கிய ஜெபத்தின் நோக்கம்.

பரமபிதாவே! உம்முடைய ஜனங்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபிக்கிறோம் எங்கள் ஐக்கியத்தைக் கெடுக்கிற எங்கள் தன்னலம், சுய அக்கறை, குறுகிய மனப்பான்மை, மித்திரபேதம் முதலியவற்றை அகற்றும். உமது வாக்குத்தத்தத்தின் வல்லமையை இழக்கச் செய்கிற எங்கள் லௌகீக சிந்தையையும் மாம்ச சிந்தையையும் நீக்கும். வானைத் திறப்பதும் அடைப்பதும், சாத்தானை வீழ்த்துவதும் ஆத்துமாக்களை இரட்சிப்பதும், மலைகளை நகர்த்துவதும் உமது இராஜ்யத்தின் வருகையை தீவிரிப்பதும் ஐக்கிய ஜெபமே என்பதை எங்களுக்குணர்த்தியருளும். ஆமென்.

இரக்ஷணியமனோகரம்—குமாரானுபூதி (தொடர்ச்சி)

---

33 என்றும் களவில் பயில் நெஞ்சினன் யான்
நன்றுன் கழல் நீழலை நண்ணுவனோ
பொன்றும் பொழுதில் புகுவாய் பரதீஸ்
இன்று என்னுடன் என்று அருள் எம்பரனே.

எம்பரனே! என்றும் களவில் பயில் நெஞ்சினன் யான்=நான் எந்நாளும் களவில் பழகும் நெஞ்சையுடையவன்: நன்றுடன் கழல் நீழலை நண்ணுவனோ=நல்ல உன் திருவடி நிழலை அடைவேனோ; பொன்றும் பொழுது=நான் மரிக்கும்பொழுது: புகுவாய் பரதீஸ் இன்று என்னுடன்=இன்று என்னுடன் பரதீஸில் புகுவாய்; என்று அருள்=என்று திருவாய் மலர்ந்தருள்.

34. வருமித்து அநியாய வழக்கிடுவோர்
கருமத்தையும் மெய்யுறு கட்சிதனின்
மருமத்தையும் ஒருதி வந்துதவு என்
தருமத் துரையாய தயாநிதியே

என் தருமத் துரையாகிய தயாநிதியே=அருட் செல்வமே: வருமித்து=தீங்கு செய்யக் கருதி; அநியாய வழக்கிடுவோர் கருமத்தையும்=அநியாய வழக்காடுவோர் செயலையும்; மெய்யுறு கட்சிதனின் மருமத்தையும்=உண்மைக்காக உழைக்கும் கட்சியினரின் கருத்தையும் ஒருதி=நினைத்தருள்; அவர்களுக்கு வந்து உதவு.

35. பாசான் எருதுக்கள் பகைத்து வளைத்து
ஏசா வருபோழ்து எனை அஞ்சல் எனப்
பேசா அருள் நல்கிய பேர் உதவிக்கு
ஈசா அடியேன் புரி ஈடு உளதோ.

ஈசா=இறைவனே; பாசான் எருதுக்கள்=பாசான் நாட்டுப் பலத்த எருதுக்கள்போன்ற கொடியவர்கள்; பகைத்து, வளைத்து=பகைத்து என்னைச் சூழ்ந்துகொண்டு; ஏசா=வைது கொண்டு; வரபோழ்து=வரும்பொழுது; எனை=என்னைநோக்கி,

அஞ்சல் என=அஞ்சாத என்று ; பேசா=சொல்லி ; அருள் நல்கிய பேர் உதவிக்கு=அருள்புரிந்த பேர் உதவிக்கு ; அடியேன் புரி ஈடு=அடியேன் செய்யக்கூடிய கைம்மாறு ; உளதோ=உண்டோ.

36. பகல் புக்க நிலத்து இருள் பாறுதல்போல்
இகல் புக்க இடம் தெரியாது இரிய
புகல் புக்க எனக்கு அருள் பூத்தனையே
அகல் புட்கர வீறு அடல் ஆரணனே.

பகல் புக்க நிலத்து=பகல் ஒளி நுழைந்த இடத்தில் : இருள் பாறுதல் போல்=இருள் ஓடுதல்போல் : இகல் புக்க இடம் தெரியாது இரிய=தீயோரின் பகை இருந்த இடம் தெரியாமல் ஒழிய ; புகல் புக்க எனக்கு=உன்னை அடைக்கலமாக அடைந்த எனக்கு ; அருள் பூத்தனை=அருள் செய்தாய் ; அகல் புட்கர வீறு=அகன்ற கடலின் கொந்தளிப்பை அடல்=அடக்கிய ; ஆரணனே=வேத சொரூபியே.

37. சாலத்தின் முதிர்ந்த சழக்கர் தொழில்
மூலத்தை அறிந்து முனிந்து எளியேன்
ஓலத்தை உவந்து உதவுற்றனை—மா
சீலத் தவ ஞான திவாகரனே

சாலத்தின்=பொய் ஒழுக்கத்தில் : முதிர்ந்த=தேர்ந்த, சழக்கர்=தீயோருடைய, தொழில்=செயலின் மூலத்தை தீயநோக்கத்தை: முனிந்து=வெறுத்து ; எளியேன் ஓலத்தை=அடியேன் இடும் ஓலத்தை ; உவந்து=விரும்பிக் கேட்டு : உதவுற்றனை=உதவி புரிந்தாய் ; மா சீல தவ ஞான திவாகரனே=சிறந்த ஒழுக்கும், தவம், ஞானம் இவற்றை வளர்க்கு சூரியனே.

38 மாயா பிரபஞ்ச வனத்து இருளில்
பேயோடு நடம்புரி பித்தன் எனைக்
காயாது கசிந்து கடைக்கணி என்
தாயே தரணிக்கொரு தாரகமே

தாயே ! தரணிக்கு ஒரு தாரகமே=உலகிற்கு ஒப்பற்ற ஓர் அடைக்கலமே ; மாயா பிரபஞ்ச வனத்து இருளில்=மாயை ஆன இவ்வுலகமாகிய காட்டிலுள்ள அஞ்ஞான இருளில் ; பேயோடு=அக்கிரம சிந்தையோடு ; நடம்புரி=ஆடித்திரிந்த ; பித்தன் எனை=பித்தனாகிய என்னை ; காயாது=கோபியாமல் ; கசிந்து=மனதுருகி கடைக்கணி=கடைக்கண்பார்.

39. முன் பாக்கிய தீமை முதிர்ந்து இனம்
துன்பாக்கிய நோவு துடைத்தருள்வாய்
என்பாக்கியம் நீ அலது இலை—சுகம்
நன் பாக்கியம் நல்தி நராதிபனே.

நர ஆதிபனே=மக்கட்கெல்லாம் இறைவனே ; முன்பு ஆக்கிய தீமை=சிறுவயது முதல் செய்த பாவம் ; முதிர்ந்து=முற்றி ;

தினம்=நாள்தோறும்; துன்பு ஆக்கிய நோவு=துன்பத்தைத் தரும் மனநோவை; துடைத்தருள்வாய்=அகற்றியருள்; என் பாக்கியம் நீ அலது இலை=நீ அல்லாமல் வேறு பாக்கியம் எனக்கு இல்லை; சுகம், நன்பாக்கியம்=தேக சுகத்தையும், நல் ஆன்ம பாக்கியத்தையும்; நல்கு=ஈந்தருள்.

வேத வினாக்கள்

(கனம் செல்வம் டெயிலர் அம்மாள், வேதபாடசாலை, பசுமலை).

1. எந்த அரசன் கடவுளிடமிருந்து சூரிய கடிகாரத்தில் பாகை பின்னிட்டுப் போகும் அடையாளம் பெற்றார்?
2. எந்த கோத்திரம் வனாந்திர பிரயாணத்தில் உடன்படிக்கைப் பெட்டியை காவல் புரிந்தது?
3. புதிய ஏற்பாட்டில் எந்த புஸ்தக ஆக்கியோன் அறியப்படாமல் இருக்கிறார்?
4. முதலில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டின் புஸ்தகம் எது?
5. எந்த யூதத் தலைவன் ஓர் அரசனுக்குப் பானபாத்திரக்காரனாய் இருந்தார்?
6. எந்த பேர்போன யூதப்பெண் கிறிஸ்துவின் மனுஷீக மூதாதையர்களில் ஒருவர்?
7. ஆலயத்தை அவமதித்த எந்த யூத அரசன் குஷ்டரோகத்தால் தண்டிக்கப்பட்டார்?
8. ஓய்வுநாளின் துவக்கத்தைப்பற்றி வேதத்தில் கூறும் புஸ்தகம் எது?
9. இஸ்ரவேலர் வனாந்திரத்தில் எத்தனை வருஷங்கள் கழித்தனர்?
10. எந்த சபையின் அங்கத்தினர் தங்களைச் சிலர் பவுலைச் சேர்ந்தவர்கள் என்றும், சிலர் அப்பல்லோவை, சிலர் கேபாவை, மற்றும் சிலர் கிறிஸ்துவை சேர்ந்தவர்களென்றும் பிரிவினை காட்டினர்?
11. புலம்பலின் தீர்க்கதரிசி யார்?
12. அரேபியாவில் பவுல் எப்போது 3 வருடங்களைக் கழித்தார்?

(விடைகளுக்கு மற்றொரு பக்கம் பார்க்கவும்—ப...ர்)

பந்தயக் கதைப்போட்டி

பரிசு வாங்க முன் வாருங்கள்! எல்லாரும் இதில் பங்கெடுக்கலாம்!

முதல் பரிசு	ரூ. 20
இரண்டாம் பரிசு	ரூ. 15
மூன்றும் பரிசு	ரூ 10
நான்காம் பரிசு	ரூ 5

விதிகள்

1. 6 –12 வயதுப் பள்ளி மாணவருக்குப் பொருத்தமான கதையாயிருக்க வேண்டும்.
2. சன்மார்க்க அல்லது மார்க்கப் போதனை அடங்கியதாயிருக்கவேண்டும். உதாரணமாய் கீழ்கண்ட பொருள்களின்மேல் கதை எழுதவாம்:— உதவிசெய்தல், தைரியம், உண்மை, பகிர்ந்துகொள்ளல்.
3. தானே சுயேட்சையாய் எழுதுகிற கதையாயிருக்க வேண்டும். காப்பிபண்ணின கதையாயிருக்கக்கூடாது.
4. 1000 வார்த்தைகளுக்குமேல் எழுதக்கூடாது
5. முழுக் காகிதத்தில் ஒருபக்கம் மாத்திரம் தெளிவாய் எழுதவும்.
6. நியாயாதிபதிகளின் தீர்ப்பே முடிவானது.
7. தெரிந்தெடுக்கப்பட்ட கதைகள் அத்தியட்சாதீனப் பத்திரிகை "சத்தியவர்த்தமானி"யில் பிரசுரிக்கப்படும்.
8. எல்லாக் கதைகளும் நூல் கழகத்திற்கு சொந்தமாகும்.
9. கதைகளை "எ. சாமுவேல் ஐயர், வேதப்பாடசாலைத் தலைவர், பசுமலை" என்ற விலாசத்திற்கு பெப்ரவரி 1, 1955க்கு முன் அனுப்பிவைக்கவும்.

LENOX PRESS, PASUMALAI, 1955 473 C.